எஸ்ஐஆருக்கு ஆதரவாக வழக்குப் போட்டது ஏன்?

எடப்பாடி பழனிசாமி பரபரப்பு பேட்டி

ஓமலூர், நவ.22: எஸ்ஐஆருக்கு ஆதரவாக உச்சநீதிமன்றத்தில் வழக்கு போட்டது ஏன் என்பது குறித்து எடப்பாடி பழனிசாமி விளக்கம் அளித்துள்ளார்.

சென்னையில் இருந்து சேலத்திற்கு நேற்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வந்தார். சேலம் விமான நிலையத்தில் அவர் அளித்த பேட்டி:

கடந்த 18ம் தேதி கர்நாடக துணை முதல்வர் சிவக்குமார் அளித்த பேட்டியில், மேகதாது அணை கட்டும் பணி முழுவீச்சில் தொடங்கப்படும். முழு விரிவான திட்ட அறிக்கை நீர்வள ஆணையத்திடம் வழங்கப்படும். மேகதாது அணைத் திட்டத்திற்காக தனி அலுவலகம் அமைக்கப்படும் என முடிவெடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார். மேகதாது அணை கட்டப்பட்டால் டெல்டா மாவட்டங்கள் பாலைவனமாகி விடும்.

தமிழகத்தில் ஜீவநதியாக இருப்பது காவிரி நதி. அந்த நதிநீரை நம்பித்தான் பல லட்சம் விவசாயிகள் வேளாண்மை பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். 20 மாவட்டங்களுக்கு குடிநீர் ஆதாரமாக காவிரிதான் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் இன்றைக்கு கர்நாடக அரசு இப்படி ஒரு திட்ட அறிக்கையை மத்திய நீர்வள ஆணையத்திடம் சமர்ப்பிப்போம் என்று தெரிவித்துள்ளது. இதற்கு தமிழ்நாடு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கோவை மெட்ரோ ரயில் திட்ட அறிக்கையில் குளறுபடி ஏற்பட்டுள்ளது. 2025ல் மக்கள் தொகை எவ்வளவு உள்ளது என்பதை கணக்கிட்டு அனுப்ப வேண்டும்.

குளறுபடி இன்றி ஒன்றிய அரசின் விதிகளுக்குட்பட்டு அறிக்கையை அனுப்ப வேண்டும். மதுரை மாநகராட்சியிலும் இதே நிலைதான். அதிமுக ஆட்சிக்கு வந்தது இரண்டு மெட்ரோ ரயில் திட்டங்களும் நிறைவேற்றப்படும். நிரந்தர டிஜிபி இதுவரை நியமிக்கப்படவில்லை. இனியும் காலதாமதம் செய்யாமல் உடனடியாக டிஜிபியை நியமனம் செய்து, சட்டம் ஒழுங்கை காப்பாற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

எஸ்.ஐ.ஆர் குறித்து அதிமுக சார்பில் ஆதரவாக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது ஏன் என்று நிருபர்கள் கேட்டதற்கு, எஸ்.ஐ.ஆர். பணி 21ஆண்டு காலம் நடைபெறவில்லை. இதனால் இறந்தவர்களின் பெயர்கள் நீக்கப்படவில்லை. இரட்டை வாக்காளர்கள் தொடர்ந்து இடம் பெற்றுள்ளனர். ஆர்.கே.நகர் தொகுதியில் 44 ஆயிரம் வாக்குகள் முறைகேடாக இடம் பெற்றிருப்பதாக உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தோம். அதனடிப்படையில் 30 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர். நீதிமன்றத்தை நாடி கரூரில் 10 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர். தி.நகரில் பல்லாயிரக்கணக்கான வாக்காளர்கள் முறைகேடாக இடம் பெற்றுள்ளனர். இது தொடர்பான வழக்கில் தேர்தல் ஆணையம் எஸ்.ஐ.ஆர் பணி தொடங்க இருப்பதாக தெரிவித்தனர். தாம்பரம் தொகுதியில் 360 வாக்குகள் ஒரே வீட்டில் இடம்பெற்றுள்ளது. மற்றொரு பகுதியில் 150 வாக்குகள் இடம்பெற்றுள்ளது.

இதையெல்லாம் களைய வேண்டும். உண்மையிலேயே நேர்மையான வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெற வேண்டும் என்பதற்காகத்தான் எஸ்.ஐ.ஆர் பணி நடைபெற்று வருகிறது.

அதனால், எஸ்.ஐ.ஆர் பணியை நாங்கள் ஆதரிக்கிறோம். தேர்தல் ஆணையம் விழிப்போடு இருந்து எஸ்.ஐ.ஆர் பணி முறையாக நடப்பதை உறுதி செய்ய வேண்டும். தேர்தல் ஆணைய அறிவுறுத்தல்படி மாவட்ட ஆட்சியர்கள் முறையாக செயல்பட வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

எஸ்.ஐ.ஆருக்கு ஆதரவாக உச்சநீதிமன்றத்தில் அதிமுக வழக்கு தொடர்ந்து உள்ளதை எதிர்கட்சிகள் விமர்சித்து வரும் நிலையில், எடப்பாடி விளக்கமளித்து உள்ளார்.

நெல் ஈரப்பதம் விவகாரம் மழுப்பலான பதில்

நெல் ஈரப்பதம் உயர்த்தி கொள்முதல் செய்ய, உங்கள் கோரிக்கை உட்பட அரசியல் கட்சி தலைவர் கோரிக்கையை ஒன்றிய அரசு நிராகரித்துள்ளதே என்ற கேள்விக்கு, 'எனக்கு முழுமையான விவரம் தெரியவில்லை. தெரிந்தவுடன் பதில் சொல்கிறேன். எங்களைப் பொறுத்தவரை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்தி உள்ளேன். விவசாயிகள் வாழ்வாதாரம் என்பதால் ஒன்றிய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்' என்று கேட்டுக் கொள்கிறேன்.

பட்டியலின எம்எல்ஏ தரையில் அமர வைக்கப்பட்டதால் சர்ச்சை

எஸ்ஐஆர் குறித்த அரூர் ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் பசுபதி தலைமையில் அதிமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது. அப்போது பட்டியலினத்தை சேர்ந்த அரூர் எம்.எல்.ஏ. சம்பத்குமார் தரையில் அமர வைக்கப்பட்டு இருந்ததாக கூறப்படுகிறது. இதுதொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது குறித்த கேள்விக்கு, 'அதிமுக ஜாதிக்கு அப்பாற்பட்ட கட்சி. பட்டியலின மக்களுக்கு அதிமுக எப்போதும் உயர்வான இடத்தை வழங்கி வருகிறது' என்று எடப்பாடி பழனிசாமி கூறினார்.

▶ அதிமுக ஆலோசனை கூட்டத்தில் தரையில் அமர்ந்திருக்கும் எம்எல்ஏ சம்பத்குமார்.

சேலத்தில் விஜய் பிரசார கூட்டத்திற்கு

4 வாரங்களுக்கு முன்பே அனுமதி கேட்க வேண்டும்

குறைகளை நிவர்த்தி செய்து தருமாறு போலீஸ் பதில்

சேலம், நவ.22: சேலத்தில் நடிகர் விஜய் பிரசாரம் தொடங்க அனுமதி கேட்ட விவகாரத்தில் குறைகளை நிவர்த்தி செய்து 4 வாரத்துக்கு முன்பே தருமாறு போலீசார் பதில் அளித்துள்ளனர்.

தவெக தலைவர் விஜய், சனிக்கிழமை தோறும் நடத்திய பிரசார பயணம், கரூரில் 41பேர் உயிரிழந்ததையடுத்து நிறுத்தப்பட்டது. இந்நிலையில் 2 மாதத்திற்கு பின் நடிகர் விஜய் மீண்டும் சேலத்தில் இருந்து தேர்தல் பிரசாரத்தை தொடங்க இருக்கிறார். இதையடுத்து வருகிற டிசம்பர் 4ம் தேதி சேலத்தில் பிரசாரம் தொடங்குவதற்கு அனுமதி கேட்டு சேலம் மாநகர போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில், த.வெ.க. மாவட்ட செயலாளர் தமிழன் பார்த்திபன் கடிதம் கொடுத்தார். சேலம் கோட்டை மைதானம், போஸ் மைதானம், தாளமுத்து நடராஜன் வீட்டின் அருகில் இருக்கும் மைதானம் என ஏதாவது ஒரு இடத்தில் அனுமதி கொடுக்குமாறு கேட்டிருந்தார். ஆனால், இந்த பகுதிகள் மிகவும் குறுகிய இடங்கள் என்பதால், கடந்த நாடாளுமன்ற தேர்தலின்போது பிரதமர் மோடி பங்கேற்ற பொதுக்கூட்டம் நடந்த சீலநாயகன்பட்டியில் உள்ள கெஜல்நாயக்கன்பட்டி திறந்தவெளி மைதானத்தில் பிரசாரத்துக்கு திட்டமிடுங்கள் என போலீசார் தெரிவித்தனர். இதை ஏற்க மறுத்த தவெகவினர், குறுகிய இடமான 3 இடங்களில் ஏதேனும் ஒரு இடம்தான் வேண்டும் என்று அடம் பிடித்தனர்.

இதனை பரிசீலனை செய்தவுன் உதவி கமிஷனர் சரவணன், த.வெ.க.வினருக்கு விளக்கம் அளித்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது: தங்களின் கட்சி நிகழ்ச்சி நடைபெறுவதாக சொல்லும் 4ம்தேதி, காவல்துறையினர் வெளிமாவட்ட பாதுகாப்பு பணிக்கு செல்வதால் தேவையான போலீசாரை நியமிக்க முடியாது. விஜயின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெறுவதாக கூறியுள்ள இடங்களில் எத்தனை நபர்கள் கலந்து கொள்வார்கள் என்ற விவரத்தை தெரிவிக்கவில்லை. 4ம்தேதி சேலம் மாவட்டம் மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து எவ்வளவு பேர் கலந்து கொள்வார்கள் என்ற விவரம் இல்லை.

எனவே, தங்களின் மனு மீது உரிய நடவடிக்கை எடுக்க இயலாது. இனி வரும் காலங்களில் தவெக தலைவர் விஜய்யின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு அனுமதி வேண்டி மனு அளிக்கும் பட்சத்தில், நிகழ்ச்சி நடக்க இருக்கும் தேதியில் இருந்து 4 வாரங்களுக்கு முன்னதாகவே மனு அளிக்க வேண்டும். மேற்கண்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து மனு அளிக்கும் பட்சத்தில் காவல்துறை அம்மனு மீது நடவடிக்கை எடுத்து தகுந்த பாதுகாப்பு அளிக்கும். இவ்வாறு அவர் கூறியுள்ளார். இந்த விளக்கத்தை மாவட்ட செயலாளர் தமிழன் பார்த்திபன் ஏற்றுக்கொண்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிறிய இடத்தில் அனுமதி கேட்டது ஏன்?

பரபரப்பு தகவல்கள்

விஜய் பிரசாரத்திற்கு சேலம் கோட்டை மைதானம், போஸ் மைதானம், தாளமுத்து நடராஜன் வீட்டின் அருகே இருக்கும் காலிஇடம் ஆகிய இடங்களில் ஏதாவது ஒரு இடத்தை ஒதுக்குமாறு கேட்டுள்ளனர். கோட்டை மைதானத்தை பொறுத்தவரை இருக்கை போட்டு அமர்ந்தால் 5 ஆயிரம் பேர் வரை அமரலாம். நின்றுக்கொண்டிருந்தால் 8 ஆயிரம் பேர் வரை நிற்கலாம். போஸ் மைதானத்தில் இருக்கை போட்டு 9 ஆயிரம் பேர் அமரலாம். 15 ஆயிரம் பேர் நிற்கலாம். இதேபோல், தாளமுத்து நடராஜன் வீட்டின் அருகில் இருக்கும் மைதானமும் குறுகிய இடம்தான். இங்கு 30 ஆயிரம் வரை கூடலாம். ஆனால், இந்த இடம் தேசிய நெடுஞ்சாலை அருகில் வருவதால், இந்த 3 இடங்களையும் அவர்கள் குறிப்பிட்டு கேட்டிருப்பது அரசியல் வட்டாரத்தில் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்த 3 இடத்திலும் அனுமதி கொடுத்தால் மாநகர் முழுவதும் ஸ்தம்பித்து போய்விடும்.

பேருந்துகள் உள்ளே வரவும் வெளியே செல்லவும் வாய்ப்பில்லை என்பதை தெரிந்துகொண்டே அவர்கள் அந்த இடத்தை கேட்டிருப்பது காவல் துறைக்கு நெருக்கடி கொடுக்கும் நோக்கமாக இருக்கலாம் என கூறப்படுகிறது. இந்த இடத்தை போலீசார் கொடுக்க மறுக்கும் பட்சத்தில் தங்களை கண்டு பயந்துவிட்டார்கள், தங்களுக்கு நெருக்கடி கொடுக்கிறார்கள் என்பதை சொல்லவும் இதுபோன்ற செயலில் ஈடுபட்டுள்ளார்களா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

அதேநேரத்தில் எவ்வளவு பேர் வருவார்கள் என்ற விவரத்தையும் அவர்கள் தெரிவிக்கவில்லை. ஏதாவது ஒரு வழியில் நெருக்கடி ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த பிரசாரத்துக்கு அனுமதி கேட்டார்களா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. 41பேர் உயிரிழந்த நிலையில் பொதுமக்கள் மிகுந்த கோபத்துடனும் அச்சத்துடனும் இருந்து வரும் நிலையில் அதனை திசை திருப்புவதற்காக நடிகர் விஜய் ஈடுபட்டுள்ளாரா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இதுகுறித்து போலீசார் கூறுகையில், 'சென்னை உயர்நீதிமன்றம் விதித்த விதிமுறைகளை அவர்கள் கடைபிடித்தால் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும்' என்றனர்.

மாணவியை கூட்டு பலாத்காரம் செய்த வழக்கு

அதிமுக மாஜி கவுன்சிலர் உள்பட 5 பேரும் விடுதலை

ஸ்ரீவில்லிபுத்தூர் கோர்ட் உத்தரவு

ஸ்ரீவில்லிபுத்தூர், நவ. 22: ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் கடந்த 2022-23ல் 9ம் வகுப்பு படிக்கும் மாணவிக்கு படிப்பிற்கு உதவி செய்வதாக கூறி கூட்டு பாலியல் பலாத்காரம் செய்ததாக பரமக்குடி அதிமுக முன்னாள் கவுன்சிலரும், ரியல் எஸ்டேட் அதிபருமான சிகாமணி (44), அவரது ஊழியர்கள் அன்னலட்சுமி (34), கயல்விழி (45), புதுமலர் பிரபாகரன் (42), ஜவுளிக்கடை உரிமையாளர் ராஜா முகமது (36) ஆகியோரை, பரமக்குடி மகளிர் போலீசார் போக்சோ சட்டத்தில் கைது செய்தனர்.

இந்த வழக்கு ராமநாதபுரம் போக்சோ நீதிமன்றத்தில் சிகாமணி ஜாமீன் பெற்றார். இதை எதிர்த்து சிபிசிஐடி, ஐகோர்ட் மதுரை கிளையில் மனு செய்தநிலையில், அவரது ஜாமீன் ரத்து செய்யப்பட்டது. இதை எதிர்த்து சிகாமணி உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். இதில் ஐகோர்ட் மதுரை கிளை உத்தரவு சரிதான் என்றும், வழக்கினை ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றத்திற்கு மாற்றி 5 மாதத்தில் முடிக்கவும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்படி கடந்தாண்டு இந்த வழக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட போக்சோ நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. இந்த வழக்கில் நேற்று நீதிபதி புஷ்பராணி அளித்த தீர்ப்பில் சிகாமணி உள்பட 5 பேரையும் விடுதலை செய்து உத்தரவிட்டார்.

THE TAMIL NADU Dr.M.G.R. MEDICAL UNIVERSITY
No. 69, Anna Salai, Guindy, Chennai – 600 032

NOTIFICATION
Rc.No. EI(1)/ 23962/ 2023, dated 21.11.2025

The Tamil Nadu Dr.M.G.R. Medical University invites applications to fill up the following Teaching posts in Medical Departments of this University on full time contract basis :

1.	PROFESSOR	Three (03)
2.	ASSOCIATE PROFESSOR/ READER	Four (04)
3.	ASSISTANT PROFESSOR/LECTURER	Eleven (11)
4.	SENIOR RESIDENT	Two (02)
5.	TUTOR	One (01)

For more information, please visit www.tnmgrmu.ac.in

Sd/-
DIPR/1385/Display/2025 REGISTRAR (FAC)

மழைநீர் உயிர்நீர் — மழைநீரை சேகரிப்பீர்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 286/2025-2026

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி **பொது நிதி 2025-26 ன்** கீழ், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் 1 க்குட்பட்ட பகுதிகளில் உள்ள 13 எண்கள் துணை கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் 23 சாலையோர கழிவுநீர் உந்து நிலையங்களை ஓராண்டுக்கு இயக்கி பராமரிக்கும் பணியினை **ரூ.185.00 இலட்சம்** மதிப்பீட்டில், மேற்கொள்ள **19.12.2025** அன்று நடைபெறும் ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்க விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் மின்னணு முறையில் **http://tntenders.gov.in** இணையதளத்தின் மூலமாகவும், நேரிலும் **19.12.2025** மாலை **3.00** மணிக்குள் சமர்ப்பிக்கும் ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை **4.00** மணியளவில் திறக்கப்படும்.

மேற்கண்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மேற்குறிப்பிட்டுள்ள இணையதளத்தில் உள்ளது. மேலும் விவரங்களுக்கு மாநகராட்சி மைய அலுவலகத்தில் உள்ள பொறியியல் பிரிவில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

ஆணையாளர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

இ6/9722/2025/மையம் செ.ம.தொ.இ/6269/ஒப்பந்தப்புள்ளி/2025

க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
GRIHUM HOUSING FINANCE
பதிவு அலுவலகம்: 6-வது தளம், பி-பில்டிங், கங்கா டீரூனோ வணிகப் பூங்கா, லோஹேகான், புனே-411014

கோரிக்கை அறிவிப்பு சர்பாசி சட்டம், 2002 பிரிவு 13(2)-ன் கீழ்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்/ உப கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் ஆகிய நீங்கள், உங்கள் அசையா சொத்து அல்லது சொத்துகளையோ, சொத்து வசதிகளையோ வீட்டுக் கடன்/கடன்கள் பெறுவதற்காக இதற்குப் பின்னர் கடனீட்டுக் கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும் **க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்** நிறுவனத்தில் அடமானம் வைத்திருக்கிறீர்கள். நீங்கள் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், உங்களுடைய கடன் செயல்படாத சொத்துப் பிரிவில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. கடனீட்டு நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் கடனீட்டு அமலாக்கச் சட்டம் 2002 பிரிவு 13(2) மற்றும் கடனீட்டு (அமலாக்க) விதிகள் 2002 இன் கீழ் திருப்பிச் செலுத்தப்படாத கடனை மீட்பதற்கான கோரிக்கை அறிவிப்பு உங்களுடைய கடைசியாக அறிவிக்கப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அதை நீங்கள் பெற்றுக் கொள்ளாததால் திரும்ப வந்துவிட்டது. எனவே கோரிக்கை அறிவிப்பில் உள்ளவற்றை கடனீட்டு அமலாக்கச் சட்டம் 2002 பிரிவு 13(2), விதி 3 (1) இன் படி மாற்றுமுறையில் வெளியிடப்பட்டுள்ளது.
கடன்தாரர்கள், உப கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், பாதுகாவலர்கள், செலுத்தப்ட வேண்டிய நிலுவைத் தொகை ஆகிய விவரங்கள் கோரிக்கை அறிவிப்பு கீழே குறிப்பிடப்பட்டவர்களுக்கு மேற்படி சட்டத்தின் பிரிவு 13 (2) கீழ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வ. எண்	கடன்தாரர், உப கடன்தாரர், ஜாமீன்தாரர் பெயர் மற்றும் கடன் தொகை	கடனீட்டுச் சொத்தின் விவரங்கள்	கோரிக்கை அறிவிப்பு நாள் / நிலுவைத் தொகை ரூ.
1	பரமசிவன் காமாட்சி கடன் தொகை: Rs.750000/- கடன் எண்.HF0523H21100342	தென்காசி பதிவு மாவட்டம், மேலநீலிதநல்லூர் சார் பதிவு மாவட்டம், மேலநீலிதநல்லூர் சார் பதிவு அலுவலகம், மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றியம், ஈச்சந்தா,பஞ்சாயித்து ஈச்சந்தா கிராமம், அபன்புஞ்சை சர்வே எண்.337/38 இல் உள்ள 52 சென்ட்களில் 260.52 ச.மீட்டருக்குச் சமமான 2804.175 ச.அடிக்குச் சமமான 6.4375 சென்ட்கள் பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள நிலம் உடைய சொத்து. **எல்லைகள்:** வடக்கு: பால்ராஜ், காமாட்சிக்குச் சொந்தமான நிலம், தெற்கு: கிழக்கு மேற்கு நடைபாதை, கிழக்கு: வெள்ளையாவுக்குச் சொந்தமான நிலம், மேற்கு: குருவம்மாளுக்குச் சொந்தமான நிலம்.	11/11/2025 ரூ.8,73,617/- (ரூபாய் எட்டு லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து அறுநூற்று பதினேழு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 16.85% வட்டி.
2	மாரியப்பன், சாராள் M கடன் தொகை: Rs.500000/- கடன் எண்.HF0523H21100182	திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வட்டம், திருநெல்வேலி பதிவு மாவட்டம், திருநெல்வேலி இணை 2 சார் பதிவு அலுவலகம், புதூர் கிராமம், கப்பிரமணியபுரத்தில் நத்தம் சர்வே எண்: 55/2a துணை பிரிவு சர்வே எண்: 552/2a12 உள்ள 110.89 ச.மீட்டருக்குச் சமமான 1185 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. **எல்லைகள்:** வடக்கு: கிழக்கு மேற்கு தெரு, கிழக்கு: வடக்கு தெற்கு சாலை, தெற்கு: காத்தப்பனுக்குச் சொந்தமான மனை, மேற்கு: ஆறுமுகத்துக்குச் சொந்தமான வீடு. அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கில் 32 அடி, தெற்கில்.28 அடி, தெற்கு வடக்காக மேற்கில்41 அடி, கிழக்கில் 38 அடி.	11/11/2025 ரூ.5,73,966/- (ரூபாய் ஐந்து லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தாறு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 18.85% வட்டி.
3	வள்ளி பிச்சமணி, வனராஜ் கடன் தொகை: Rs.450000/- கடன் எண்.HF0523H21100302	சேரன்மகாதேவி பதிவு மாவட்டம், விக்கிரமசிங்கபுரம் சார் பதிவு அலுவலகம், அடையக்கருங்குளம் கிராமம், 3 ஆவது வார்டு, கல்சுந்து காலனி, சர்வே எண்.103/42, 100 ச.மீட்டர் பரப்பளவு உள்ள கதவு எண்.3/84, மனை எண்.6 இல் உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. **எல்லைகள்:** வடக்கு: வீணானா நிலம், தெற்கு: கிழக்கு மேற்கு சாலை, கிழக்கு: மாயாண்டிக்குச் சொந்தமான வீடு, மேற்கு: சுப்பையாவுக்குச் சொந்தமான நிலம்.	11/11/2025 ரூ.4,86,476/- (ரூபாய் நான்கு லட்சத்து எண்பத்தாறாயிரத்து நானூற்று எழுபத்தாறு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 22.85% வட்டி.
4	கணேசன் மாடசாமி, கௌசல்யா K கடன் தொகை: Rs.500000/- கடன் எண்.HF0523H21100015	இனம் 1: தென்காசி மாவட்டம், தென்காசி வட்டம், தென்காசி பதிவு மாவட்டம், பூலுர் சத்திரம் சார்-பதிவு அலுவலகம், அருந்ததியாபுரம், பிளாக் எண்.13, அருந்ததியாபுரம் கிராமம் மற்றும் பஞ்சாயத்து, நத்தம் சர்வே எண்.379/36, குர்போதை துணைப் பிரிவின் எண். 379/40 இல் உள்ள ஹைக்டேர் 0.01.00) காலி நிலத்தின் மேற்கு பகுதியில் 0.02.0 H.A. இல் உள்ள 0.01.0 ha க்கு சமமான 100 ச.மீட்டர் பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. **எல்லைகள்:** மேற்கு: மணிகண்டன் & குருவம்மாளுக்குச் சொந்தமான வீடு, கிழக்கு: பார்வதிக்குச் சொந்தமான வீடு மற்றும் பொது பாதை, வடக்கு: பட்டனுக்குச் சொந்தமான வீடு, தெற்கு: சடைச்சி அம்மாளுக்குச் சொந்தமான வீடு.	11/11/2025 ரூ.5,78,239/- (ரூபாய் ஐந்து லட்சத்து எழுபத்து எட்டாயிரத்து இருநூற்று முப்பத்து ஒன்பது மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 18.85% வட்டி.
5	சண்முகத்தாய் G கணபதி P கடன் தொகை: Rs.900000/- கடன் எண். LAP0523200000005013128	திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வட்டம், திருநெல்வேலி பதிவு மாவட்டம், கங்கைகொண்டான் சார் பதிவு அலுவலகம், 3 ஆவது வார்டு, நாராயணசாமி கோயில் தெரு, கட்டளை உதயனேரி கிராமம், உதயனேரி டவுன் புதூர் கிராமம், நத்தம் சர்வே எண்.6/2, கதவு எண்.2/3, புதிய கதவு எண்.16/3 இல் உள்ள 771.25 ச.அடி பரப்பளவு உள்ள நிலத்தில் கட்டப்பட்டுள்ள வீடு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. **எல்லைகள்:** வடக்கு: கிழக்கு மேற்கு பொது தெரு, தெற்கு: கிழக்கு மேற்கு பொதுத்தெரு, கிழக்கு: பால் தேவரின் வீட்டு மனை, மேற்கு: பி.கணபதியின் வீட்டு மனை மற்றும் அரசமுத்துவுக்குச் சொந்தமான மனை. அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கில்: 12.375 அடி, தெற்கில்: 12.50 அடி, தெற்கு வடக்கில்: 62 அடி.	11/11/2025 ரூ.9,73,833/- (ரூபாய் ஒன்பது லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து எண்ணூற்று முப்பத்து மூன்று மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 15.35% வட்டி.
6	செல்லதுரை வேலு, தங்கமாரி C கடன் தொகை: Rs.500000/- கடன் எண்.HF0523H21100407	தென்காசி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், தென்காசி பதிவு மாவட்டம், ஆலங்குளம் சார்-பதிவு அலுவலகம், ஆலங்குளம் பஞ்சாயத்து, அய்யனார்குளம் கிராமம், அயன் புஞ்சை சர்வே எண்.109/1a இல் உள்ள 1 ஏக்கர் நிலத்தில் 3049.50 ச.அடி பரப்பளவில் கதவு எண்.3/241-4 இன் மேற்குப் பகுதியில் உள்ள 141.652 ச.மீட்டருக்குச் சமமான 1524.75 ச.அடி பரப்பளவு வீட்டின் அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. **எல்லைகள்:** கிழக்கு: முருகனுக்குச் சொந்தமான நிலம், மேற்கு: மானூர் கால்வாய், வடக்கு: உத்திரமாடனுக்குச் சொந்தமான மனை, தெற்கு: 12 அடி பொதுப் பாதை.	11/11/2025 ரூ.5,71,531/- (ரூபாய் ஐந்து லட்சத்து எழுபத்து ஒராயிரத்து ஐந்நூற்று முப்பத்து ஒன்று மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 22.1% வட்டி.

எனவே கடன்தாரர்/கள் மற்றும் உப-கடன்தாரர்/கள்/ ஜாமீன்தாரர்கள் ஆகிய நீங்கள் மேற்குறிப்பிட்ட கோரப்பட்டத் தொகையை இங்கே மேலே குறிப்பிட்டவாறு மேற்கொண்டு வட்டியுடன் இந்த அறிவிப்பின் 60 நாட்களுக்குள் முழுமையாகச் செலுத்துமாறு கோரப்படுகிறீர்கள். தவறினால் கீழே கையொப்பமிட்டவர் மேற்குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்துகளின் மீதான சட்டத்தின் கீழ் நடவடிக்கையை செயல்படுத்தும் நிர்பந்தத்துக்கு உள்ளாவார். அதேவேளையில் நீங்கள், மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(13) இன்படி, எங்கள் ஒப்புதலின்றி விற்பனை, குத்தகை அல்லது பிறவழியில் மேற்கூறிய கடனீட்டுச் சொத்துகளை பெயர் மாற்றம் செய்வதற்கு தடை செய்யப்பட்டிருக்கிறீர்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்திதாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

இடம்: தமிழ்நாடு
நாள்: 22.11.2025
ஒம்/-அதிகாரப்பூர்வ அதிகாரி,
க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

இந்தியப் பெருங்கடல் வழியாக கடத்தப்பட்ட

ரூ.1,500 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் பறிமுதல்

2 துப்பாக்கிகளும் சிக்கின

ராமேஸ்வரம், நவ. 22: இலங்கை கடற்படை சர்வதேச கடற்பகுதியில் போதை பொருட்களை கடத்திச் செல்லும் படகுகள் மற்றும் கப்பல்களை செயற்கைக்கோள் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி தொடர்ந்து தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவு இலங்கையின் தெற்கு கடற்பரப்பான இந்தியப் பெருங்கடலில் பகுதியிலிருந்து இலங்கை கடற்பகுதிக்குள் நுழைந்த ஒரு ஆழ்கடல் மீன்பிடி படகை இலங்கை கடற்படையினர் கைப்பற்றி தங்காலை மீன்பிடித் துறைமுகத்திற்கு கொண்டு வந்தனர்.

அங்கு படகை ஆய்வு செய்ததில் அதில், 261 கிலோ மெத்தபெட்டமைன் போதைப்பொருள், 115 கிலோ ஹெராயின் என மொத்தம் 376 கிலோ போதை பொருட்கள் இருந்தன.

மேலும் 2 கை துப்பாக்கிகளும் பறிமுதல் செய்யப்பட்டு படகிலிருந்த 6 இலங்கையை சேர்ந்த கடத்தல்காரர்களை கைது செய்தனர். இதன் சர்வதேச மதிப்பு சுமார் ரூ.1,500 கோடியாகும்.

மேலும் இந்த போதைப்